# பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

## மானியக் கோரிக்கை எண். 35

அறிவிப்புகள்

**2015 – 2016**

## 1. தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு பிரத்தியேக இணைய குத்தகை இணைப்பு (Dedicated leased line) வழங்குதல்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் இணையதளத்தில் அகன்றவரிசை இணைப்புத்திறன் (Broadband Connection) பதிவிறக்கம் (download) செய்யப்படுவதற்கு பெருமளவில் பயன்படுத்தப்படுவதாலும், பதிவேற்றத் திறன் குறைவாக உள்ளதாலும், தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் வழிகாட்டல்கள் மற்றும் ஆணைகள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுவதற்கு பதிவேற்றத்திறன் மிகவும் அதிகமாக தேவைப்படுவதாலும், தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு ஆண்டிற்கு ரூபாய் 10 இலட்சம் செலவில் 8 Mbps பிரத்தியேக இணைய குத்தகை இணைப்பு (leased line) வழங்கப்படும்.

**2. தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் அலுவலக மேம்பாட்டிற்காக உபகரணங்கள் வழங்குதல்**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் தகவல்கள் கோரும் முறையீட்டாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை கருத்திற்கொண்டு, தகவல் கோரும் நபர்களுக்கு தகவல்கள் அளிப்பதற்கும் முறையான அலுவலக பயன்பாட்டிற்கும், ரூபாய் 5 இலட்சம் செலவில் புத்தக அலமாரிகள், திறன்கொடு கருவி (Server), திரையிடு பொறி (Projector) மற்றும் கணினி உபகரணங்கள் (Computer accessories) வழங்கப்படும்.

**எஸ்.பி. வேலுமணி,**
நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி,
சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்
சிறைச்சாலைகள் துறை அமைச்சர்